**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 381/2025**

**Prosecution Witness : 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. ராஜாராம்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. பழனிச்சாமி** | **Calling** | : | **முதுநிலை வருவாய் ஆய்வாளர், திண்டுக்கல் மேற்கு தாலுகா** |
| **Village** | : | **வீரக்கல்** | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **45** |
| | | | **Dated** | : | **29.01.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

**1, 2 மற்றும் 4 எதிரிகள் ஆஜர்.**

அ.சா. 1 (பட்டியல் சாட்சி 1), **திரு. ராஜாராம்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை :-</u>**

நான் தற்போது திண்டுக்கல் மாவட்ட மேற்கு தாலுகா முதுநிலை வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளில் 4-ம் எதிரியை எனக்குத் தெரியும், அவர் வாகன ஓட்டுநர். மற்ற எதிரிகளை எனக்குத் தெரியாது. நான் பழனிமுருகன் பேருந்தில் 15 ஆண்டுகளுக்கு முன்பாக நடத்துநராக வேலை பார்த்த போது, அவர் அதில் பேருந்து ஓட்டுநராக பணிபுரிந்து வந்தார். 2010-ம் ஆண்டு இருக்கலாம், வக்கம்பட்டி தாண்டி எங்கள் பேருந்து போனபோது, நான்கு 20 முதல் 25 வயதுள்ள வாலிபர்கள் எங்கள் வண்டியில் ஏறினார்கள். படியில் இருந்து உள்ளே வரச்சொல்லி என்னுடன் இருந்த இன்னொரு நடத்துநர் சொன்னதற்கு

அவர்கள் மறுத்துவிட்டார்கள். நான் அவர்களிடம் போய் என்ன சண்டை என்று கேட்டேன். பிறகு படியில் நிற்கக்கூடாது என்று உள்ளே வரச்சொன்னேன். அந்த நான்கு நபர்களும் மற்ற பணிகளிடமும் சண்டை போட்டுக் கொண்டு இருந்தார்கள். அதை தடுப்பதற்காக நானும், ராமர் என்ற ஜெயராம் என்ற நடத்துநரும் முயற்சி செய்தோம். நான் பயணிகளோடு அவர்கள் சண்டைபோடுவதைத் தடுத்து அதில் ஒரு பயணியை உள்பக்கமாக இழுத்துச் சென்றேன். அப்போது யாரோ என் முதுகில் வலதுபக்கம் கத்தியால் குத்தியிருக்கிறார்கள். அதை நான் கவனிக்கவில்லை. பிறகு பயணிகளில் ஒருவர் முதுகில் இரத்தம் வருவதாகச் சொன்னவுடன்தான் கவனித்தேன். என்னோடு இருந்த நடத்துநர் ஜெயராமுக்கும் காயம் இருந்தது. அங்கிருந்து ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து எங்களை திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து, நாங்கள் சிகிச்சைக்கு சேர்ந்தோம். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **மேற்படி புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. புகார் மனு யார் எழுதியது என்று எனக்குத் தெரியாது. புகார் மனு என்னுடையதுதான். சம்பவத்தில் ஈடுபட்ட நபர்கள் எதிரி மருதையாவிற்கு உறவினர்கள், அவரோடு அவர்கள் பேசிக்கொண்டு இருந்ததாக பயணிகள் சொன்னார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-**

எனக்கு ஏற்பட்ட காயம் எப்படி, யாரால் ஏற்பட்டது என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான்.

Taken down by me/before me in open court on 29.01.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2026.01.29 19:10:14 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 381/2025**

**Prosecution Witness : 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. ஜெயராம் என்ற ராமர்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. முருகன்** | **Calling** | : | **கூலி வேலை** |
| **Village** | : | **வரப்பட்டி** | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **49** |
| | | | **Dated** | : | **29.01.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

**1, 2 மற்றும் 4 எதிரிகள் ஆஜர்.**

அ.சா. 2 (பட்டியல் சாட்சி 2), திரு. **ஜெயராம் என்ற ராமர்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>முதல் விசாரணை :-</u>

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். இதற்கு முன்பாக பேருந்து நடத்துநராக இருந்தேன். ஆஜர் எதிரிகளில் 4-ம் எதிரியை எனக்குத் தெரியும், அவர் வாகன ஓட்டுநர். மற்ற எதிரிகளை எனக்குத் தெரியாது. நான் பழனிமுருகன் பேருந்தில் 13 ஆண்டுகளுக்கு முன்பாக நடத்துநராக வேலை பார்த்த போது, மருதையா அதில் பேருந்து ஓட்டுநராக பணிபுரிந்து வந்தார். இரவு 09.00 மணியளவில் (தேதி நினைவில்லை) வக்கம்பட்டி தாண்டி எங்கள் பேருந்து போனபோது, நான்கு நபர்கள் தங்களுக்குள் கத்தியை வைத்து தகராறு செய்து கொண்டு இருந்தார்கள். அவர்கள் யார் என்று எனக்கு

அடையாளம் தெரியாது. அவர்கள் போதையில் இருந்ததால் நாங்கள் அருகே போகவில்லை. அசா. 1க்கும், எனக்கும் கத்தியால் காயம் ஏற்பட்டது. அசா. 1க்கு முதுகிலும், எனக்கு இடது பக்க இடுப்பிலும் கத்தியால் காயம் ஏற்பட்டது. வண்டியை செம்பட்டி காவல் நிலையத்திற்கு விட்டுவிட்டோம். அங்கிருந்து எங்களை எங்களை திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து, நாங்கள் சிகிச்சைக்கு சேர்ந்தோம். இது சம்மந்தமாக யார் புகார் கொடுத்தார்கள் என்று எனக்குத் தெரியாது. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் என்ன சம்மந்தம் என்று எனக்குத் தெரியாது.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

எனக்கு ஏற்பட்ட காயம் எப்படி, யாரால் ஏற்பட்டது என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான். சம்பவத்தின்போது எதிரி மருதையா டிரைவர் சீட்டில்தான் இருந்தார் என்றால் சரிதான். அவருக்கும் இந்த சண்டைக்கும் சம்மந்தம் கிடையாது என்றால் சரிதான்.

Taken down by me/before me in open court on 29.01.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA Digitally signed by V DEEPA Date: 2026.01.29 19:10:23 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**
**DINDIGUL.**
**S.C. 381/2025**
**Prosecution Witness : 3**

| Name | : | திரு. பழனிக்குமார் | Caste | : | |
|---|---|---|---|---|---|
| Father's Name | : | திரு. சோமசுந்தரம் | Calling | : | எலக்ட்ரிசியன் |
| Village | : | ஆதிலட்சுமிபுரம் | Religion | : | இந்து |
| District | : | திண்டுக்கல் | Age | : | 60 |
| | | | Dated | : | 29.01.2026 |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**1, 2 மற்றும் 4 எதிரிகள் ஆஜர்.**

அ.சா. 3 (பட்டியல் சாட்சி 17), **திரு. பழனிக்குமார்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை :-</u>**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து எலக்ட்ரிசியனாக வேலை செய்து வருகிறேன். 2010ம் ஆண்டு நான் ஆதிலட்சுமிரம் பஸ் ஸ்டாண்ட் அருகே டீக் கடை வைத்திருந்தேன். இரவு சுமார் 09.30 – 10.00 மணிக்குள் பழனிமுருகன் (TN 57 K 6768) பேருந்து அங்கு வந்தது. பேருந்திற்குள் பிரச்சனையாக இருந்தது. என்னவென்று போய் பார்த்தபோது ராஜராம் மற்றும் ராமர் என்ற இரண்டு நடத்துநர்களுக்கும் காயம் ஏற்பட்டு இருந்தது. விசாரித்தபோது டிரைவர் மருதையாவிற்கும், நடந்துநர்களுக்கும் இருந்த பிரச்சனை காரணமாக ஆளை வைத்து அவர் கத்திக்குத்து நடத்தியதாக கேட்விப்பட்டோம். ஆம்புலன்ஸ் வைத்து அந்த இரண்டு நடத்துநர்களையும்

மருத்துவனைக்கு அனுப்பி வைத்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>**

இரண்டு நடத்துநர்களுக்கும் எப்படி காயம் ஏற்பட்டது என்று நான் நேரடியாகப் பார்க்கவில்லை என்றால் சரிதான். டிரைவர் மற்றும் நடத்துநர்களுக்கு இருந்த பிரச்சனை சம்மந்தமாக நான் பஞ்சாயத்து செய்யவில்லை என்றால் சரிதான். நான் செம்பட்டி போலீசாரின் கையிருப்பு சாட்சி என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் ஆதிலட்சுமிபுரம் டீக்கடையில் இருந்தபோது, சம்பவத்தை பார்க்கவில்லை என்றாலும், இரவு 09.00 மணிக்குமேல் டீக்கடையை அடைத்து விடுவார்கள் என்றாலும் சரியல்ல. நான் சொல்வது போன்று சொன்ன நேரத்தில் எந்த சம்பவத்தையும் பார்க்கவில்லை என்றாலும், போலீசார் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

Taken down by me/before me in open court on 29.01.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA Digitally signed by V DEEPA Date: 2026.01.29 19:10:32 +0530

**Chief Judicial Magistrate,**
**Dindigul.**